**51. அரியசுவர் கதை**

அரியசுவர் என்னும்பெயரையுடையவர் ஒருவர் இருவர் அல்லர்; ஒருசேர ஆயிரம் பேர் ஆவர். இவர்கள் தக்க னுடைய மக்கள். அறிவிலும் அழகிலும் ஆண்மையிலும் ஒரே தன்மை அமைந்தவர்களாக இலங்கினார்கள். தக்கன் தன் மக்களாகிய இவர்களைப்பார்த்து நீங்கள் தவஞ்செய்து படைப்புத் தொழிலைப் பெறுங்கள்* என்று கூறினான். இவர்கள் அவ்வாறே சென்று தவத்தைச் செய்தார்கள். இவர்கள் படைப்புத் தொழில் பெறத் தவம் புரிதலை நாரதர் அறிந்தார்; விரைந்து இவர்கள் பால் வந்தார். "நீங்கள் எதன் பொருட்டுத் தவஞ் செய்கிறீர்கள்?” என்று உசாவினார். இவர்கள் தங்களுடைய நோக்கத்தை இயம் பினார்கள். நாரதர். "எப்பதவியாயினும் அவைகளிலெல்லாம்துன்பம் நிறைந்தேயிருக்கும். நீங்கள் எத்தகைய துன்பமும் இல்லாத வீடு பேற்றைப் பெறுவதுதான் சிறப்பானதாகும். எத்தகைய துன்பமும் அற்ற வீடு பேற்றின் பெருமையை எவராலும் இயம்ப முடியாது" என்று அறிவுரைகூறினார். ஒரு பொழுதும் நிரம்பாத தன்மையை உடைய அவாவை ஒழித்தால் ஒழித்த அப்பொழுதேஎப்பொழுதும் மாறாதிருக்கும் இன்ப வாழ்வை அடையலாம் என்பதை உணர்ந்த இவர்கள் தவஞ் செய்து வீடுபேற்றையோ அடைந்தார்கள்.



[அவாவை யொழித்தால் வீடு பேறு]